## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண். 29

# அறிவிப்புகள்
# 2019–2020


## வெல்லமண்டி ந. நடராஜன்

சுற்றுலாத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2019

## 1. பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான உள்ளூர் சுற்றுலாவை ஏற்பாடு செய்தல்

கடந்த இரண்டு ஆண்டுகளில் பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், அவர்களது சொந்த மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை கண்டு மகிழ நடத்தப்பட்ட சுற்றுலா, அவர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது. அதேபோல் இந்த ஆண்டும், பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு நாள் சுற்றுலா சென்று வருவதற்கு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சுற்றுலாத்துறை மூலம் மாவட்டம் ஒன்றிற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் 64 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

## 2. 2019–ஆம் ஆண்டு உலக சுற்றுலா தின விழாவினை சேலத்தில் (மாநில அளவில்) கொண்டாடுதல்

ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பு, சுற்றுலா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 27ஆம் நாள், உலக சுற்றுலா தினமாக கொண்டாடி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலாத்துறையால் உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது. அப்போது, மாநில அளவில் ஏதேனும் ஒரு முக்கிய நகரத்திலும் இவ்விழா கொண்டாடப்படும். இவ்வாண்டு உலக சுற்றுலா தின விழா **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, மாநில அளவில் சேலத்தில் கொண்டாட 25 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

## 3. சுற்றுலா அலுவலக கட்டடங்களை புனரமைத்தல்

திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள் சொந்த கட்டடங்களில் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகின்றன. இந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட வேண்டும். எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மேற்காணும் அலுவலகங்களில் மொத்தம் 100 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 4. சிதம்பரம் சுற்றுலா அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

"பூலோக கைலாசம்" என்று அழைக்கப்படும் கடலூர் மாவட்டம், சிதம்பரம் ஆன்மிக சுற்றுலாவிற்கு பெயர் பெற்ற நகரமாகும். சிதம்பரம் ஒட்டல் தமிழ்நாடு வளாகத்தில், முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சுற்றுலா அலுவலகம் இயங்கி வருகிறது. இக்கட்டடம் தற்போது சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சிதம்பரத்தில், புதிய சுற்றுலா அலுவலகம் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 5. படகு இல்லங்களை மேம்படுத்துதல்

### (அ) பைக்காரா படகு இல்லத்தில் மிதவை படகு தளம் அமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் 8 படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள பைக்காரா படகு இல்லத்தில், ஏரி நீரின் அளவு அவ்வப்போது மாறுபடுவதன் காரணமாக மிதவை படகு தளம் அமைக்கப்பட்டுள்ளது. அப்படகு இறங்கு தளமானது தற்போது சேதமடைந்துள்ளது. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** இந்த மிதவை படகு தளம் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

## (ஆ) கொடைக்கானல் படகு இல்லம் (அலகு –II)–ல் மேம்பாட்டுப் பணிகள்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இரண்டு படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. கொடைக்கானல் படகு இல்லம் (அலகு–II)–ஐ தனியார் படகு இல்லத்திற்கு இணையாக மேம்படுத்தும் வகையில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அலுவலகம், இறங்கு தளம் மற்றும் படகு இல்லத்தில் உள்ள படிகள் **26** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## 6. ஓட்டல் தமிழ்நாடு, திருத்தணியில் கூடுதல் கழிவறைகள் கட்டுதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் திருத்தணியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, திருப்பதிக்கு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நடத்தப்படும் “திருமலை–திருப்பதி” சுற்றுலாவில் அதிக சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறும் பொருட்டும் இந்த விடுதி செயல்பட்டு வருகிறது.

இங்கு தற்போதுள்ள கழிவறைகள் சுற்றுலாப் பயணிகளுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** இரண்டு கூடுதல் கழிவறைகள் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படும்.

## 7. உதகமண்டலம், ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் தார் சாலை அமைத்தல்

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள, உதகமண்டலம் ஓட்டல் தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக **65** அறைகள் உள்ளன. இத்தங்கும் விடுதி வளாகத்தில் உள்ள சாலையில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** **8** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கப்படும்.

## 8. உதகமண்டலம், இளைஞர் விடுதியில் மேம்பாட்டுப்பணிகள்

### (அ) உதகமண்டலம், இளைஞர் விடுதியில் உள்ள 25 படுக்கை வசதிகள் கொண்ட பலர் தங்கும் துயில் கூட அறையினை 2 குடும்ப அறைகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி உள்ளது. தற்போது சுற்றுலாப் பயணிகள் தனி அறைகளில் தங்குவதையே அதிகம் விரும்புகின்றனர். எனவே, பலர் தங்கும் துயில் கூட அறைகளின் தேவை மிகவும் குறைவாக உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 25 படுக்கை வசதிகள் கொண்ட பலர் தங்கும் துயில் கூட அறைகள், 2 குடும்ப அறைகளாக 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்படும்.

## (ஆ) உணவகம் மற்றும் சமையலறை – புனரமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உதகமண்டலத்தில் உள்ள இளைஞர் விடுதி கட்டடத்தில் இயங்கி வரும் உணவகம் மற்றும் சமையலறை புனரமைக்கப்பட வேண்டும். ஆகையால், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 15** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உணவகம் மற்றும் சமையலறை புனரமைக்கப்படும்.

## 9. ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூரில் 14 அறைகளை புனரமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் கோயம்புத்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகளின் தங்கும் வசதியை மேம்படுத்த, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 14** அறைகள் **30** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

## 10. ஓட்டல் தமிழ்நாடு, மதுரை (அலகு–1)ல் 10 அறைகளை புனரமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, மதுரை (அலகு–1)–ல் சுற்றுலாப் பயணிகளின் தங்கும் வசதியை மேம்படுத்த **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, 10 அறைகள் **35** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

## 11. ஓட்டல் தமிழ்நாடு, திருச்சியில் 10 அறைகள் புனரமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள திருச்சி, ஓட்டல் தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதியை மேம்படுத்த **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 10 அறைகள் **35** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

## 12. ஓட்டல் தமிழ்நாடு, தஞ்சாவூரில் 12 அறைகளின் குளியல் அறைகளை புனரமைத்தல்

தஞ்சாவூருக்கு ஆண்டு முழுவதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை புரிகின்றனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள, தஞ்சாவூர் ஓட்டல் தமிழ்நாடு பாரம்பரிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதியை மேம்படுத்த **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 12 அறைகளில் உள்ள குளியலறைகள் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

## 13. உதகமண்டலத்தில் உள்ள கூடுதல் படகு இல்லத்தில் இரண்டு உலர் கழிவறை வசதிகள் ஏற்படுத்துதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இரண்டு படகு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுகாதாரமான கழிவறை வசதி ஏற்படுத்தி தரும் பொருட்டு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** இரண்டு உலர் கழிவறைகள் (Bio Toilet) **20** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**வெல்லமண்டி ந. நடராஜன்**
சுற்றுலாத்துறை அமைச்சர்